**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.991/2024 நாள்- 10.04.2026

**வா.சா.1. சிவசுப்பிரமணியன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

பிராதில் 3 சொத்து விவரங்கள் காட்டியுள்ளேன். 1 வது தபசில் சொத்து டவுண் சர்வே எண்.60/3-ல் T.P.மில்ஸ் ரோடில் உள்ளது. 1 வது தபசில் சொத்தின் நீள, அகலம் எனக்கு ஞாபகம் இல்லை. பிராது 2 வது தபசில் சொத்து, 1 வது சொத்திற்கு உட்பட்டு வரவில்லை தனிச்சொத்தாகும். பிராது 3 வது தபசில் சொத்து எந்த தெரு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. 3 வது தபசில் சொத்தைப் பொறுத்து சஞ்சீவநாதபுரம் தெரு, டவுண் சர்வே எண்.61/2, 62/2 கிழமேல் 24 அடி, தென்வடல் 17 அடி சொத்தாக காட்டியுள்ளேன் என்றும் மேற்படி சொத்தைப் பொறுத்து பிரதிவாதி என் தகப்பனார் மீது அ.வ.எண்.146/2006 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கை எதிர்த்து தீர்ப்பின் மீது என் தகப்பனார் ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் A.S.22/2008 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த முதலாம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேல்முறையீடு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து 2 ம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது நாங்கள் வாரிசுகளாக தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு அந்த 2 ம் மேல்முறையீடும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பிராது 3 வது தபசில் சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பாகியுள்ளது என்று சொன்னால் என் தம்பி தான் வழக்கு நடத்தியதால் எனக்கு தெரியாது. பிராது 3 வது தபசில் சொத்தில் வாதிகளாகிய எங்களுக்கு எந்த பாத்தியதையும் உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே அ.வ.எண்.146/2006 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1- ல் பெத்துராஜ் என்பவர் சரோஜினியம்மாளுக்கும் தனலட்சுமியம்மாளுக்கும் 3 சொத்துக்களை

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

தானமாக எழுதிக் கொடுத்துள்ளார், வா.சா.ஆ.1-ல் சர்வே எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. சரோஜினியம்மாளும், தனலட்சுமியம்மாளும் சொத்துக்களை எவ்வாறு பிரித்துக் கொண்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2- 27.01.1989 ம் தேதியிட்ட ஆவணம் எந்த சர்வே எண்ணில் அடங்கியுள்ளது என்று கேட்டால் சர்வே எண்.60/3 ல் அடங்கியுள்ளது. வா.சா.ஆ.2-ல் கண்ட சொத்து T.P.மில்ஸ் ரோட்டிற்கு மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2-ல் கண்ட சொத்தை தான் பிராது 1, 2 சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் 1வது தபசில் சொத்து தான் வா.சா.ஆ.2-ல் கண்டது. வா.சா.ஆ.2- ஆவணத்தை பற்றி என்னால் விளக்கம் கூற இயலாது. வா.சா.ஆ.2- ஆவணத்தில் தெற்கு மாலாக பொன்னையாத்தேவர் கண்ணப்பன் நிலத்திற்கும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சர்வே எண்.61/1 க்கு வடக்கு பக்கம் தான் 1வது தபசில் சொத்து உள்ளது. சரோஜினியம்மாள் மனைக்கு தெற்கு என்று வா.சா.ஆ.2-ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3- ஐ என் அப்பா சரோஜினியம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3-ல் சர்வே எண்.60 மற்றும் 61 ல் அடங்கியுள்ள சொத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3-ல் கண்ட சொத்தும் T.P.மில்ஸ் ரோட்டில் கண்ட சொத்து என்றால் சரிதான். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தெற்கு மாலாக கண்ணப்பன் வகையறா காலிமனை என்றும், கிழமேல் வடதலை 74 அடி தென்தலை 76 அடி , மேல்தலை 10. ½ அடி, கீழ்தலை 13. ½ அடி என்று காட்டப்பட்டுள்ளது என்றும் 900 சதுரடி காலிமனையில் பிரிவின்றி 1/4 பாகம் கிரையம் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3- கிரைய ஆவணத்தின் படி மீதம் உள்ள 3 பங்கு யாருக்கு பாத்தியம் என்று கேட்டால் ¼ பாகம் தனலட்சுமி பாகத்திற்கும் மீதமுள்ள 2 பாகத்தை கண்ணப்பன் வகையறா பாதையாக பிரித்துக் கொண்டோம். வா.சா.ஆ.3- கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை பாதையாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் பாகம் பிரித்துக் கொண்டு கட்டிடம் கட்டிவிட்டோம். வா.சா.ஆ.3-ன் படி எனக்கு 225 சதுரடி தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. பிராது 1, 2 சொத்துக்களுக்கு மூல ஆவணங்கள் என் வசம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் அது **நீ.ம.சா.ஆ.1, 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,<br>இராஜபாளையம். |

நீ.ம.சா.ஆ.1- வரைபடத்தில் 3 வது தபசில் சொத்து H1KFE1 என்ற பகுதி எங்களால் தகர சாய்ப்பு அமைக்கப்பட்டிருந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அ.வ.எண்.146/2006 வழக்கின் தீர்ப்பாணையின் படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், 3 வது தபசில் சொத்து H1KFE1 என்ற பகுதி எங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி என்றும் அதை நாங்கள் அகற்றி கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும், பிரதிவாதி கோரியுள்ள எதிர்கோருரிமை அனுமதிக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3- சரோஜினியம்மாவுக்கு பாத்தியப்பட்ட சொத்தே கிடையாது என்றும் பிரதிவாதியின் உரிமையை பறிப்பதற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல பிராதில் கோரியுள்ள விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் எதிர்கோருரிமை அனுமதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. பிராது 3 வது தபசில் சொத்து அ.வ.எண்.146/2006 வழக்கின் தீர்ப்பின்படி ஒரே தரப்பினருக்குள் தீர்மானிக்கப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராது 1, 2 தபசில் சொத்துக்களுக்கு எங்களுக்கு உரிய மூல ஆவணங்கள் கிடையாது என்றும் தவறான மால்களை காண்பித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 தபசில் சொத்துக்களுக்கு காட்டப்பட்டுள்ள அளவுகள் எங்களது ஆவணங்களில் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.